**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 210/2021.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பிரதீபா. | ஜாதி | |
| கணவர் பெயர் | பிரசன்னகுமார். | தொழில் இல்லத்தரசி. | |
| கிராமம் | கிருஷ்ணன்கோவில். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 23/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு ஆஜர்).**

**<u>அ.சா.1 சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவம் மற்றவர்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு தகவல் சொன்ன அருள்ராஜா மற்றும் அருண்குமார் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல, அவர்கள் சம்பவம் இடத்திற்கு அருகில் இருந்தவர்கள். அவர்கள் இருவரும் மஞ்சள் காவி மில்லில் பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான். இறந்துபோன எனது தந்தையும் மஞ்சள் காவி மில்லில் பணிபுரிந்தவர் என்றால் சரிதான். என் தந்தை இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றால் சரிதான். சம்பவம் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். எனது தந்தை பணியை முடித்துவிட்டு திரும்பும்போது விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல, எனது தந்தை பணிக்குச் செல்லும்போதுதான் விபத்து எற்பட்டது. மஞ்சள் காவி மில்லானது கிழக்கப் பக்கம் பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். என் தந்தை தெற்குப் பக்கமிருந்து வந்தார் என்றால், சரியல்ல, என் தந்தை மேற்குப் பக்கமிருந்து கிழக்குப் பக்கமாகச் சென்றார். என் தந்தைதான்

பணிக்குச் செல்லும் அவரசத்தில் ரோட்டை கவனிக்காமல் சென்றுள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, ஒட்டுநர் உரிமம் இருக்கிறது. என் தந்தை ஓட்டி வந்த வாகனம் முறையான பராமரிப்பு இல்லாமல் இருந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும், இறந்துபோனவர் என் தந்தை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஆன புகாரை எங்கு வைத்து எழுதிக் கொடுத்தேன் என்றால், காவல் நிலையத்தில் வைத்து எழுதிக் கொடுத்தேன். புகார் கொடுத்த சமயத்தில், விபத்தை ஏற்படுத்திய நபர் மற்றும் அவர் ஓட்டி வந்த வாகனம் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால், காவல் துறையினர் சொல்லி நான் தெரிந்துகொண்டேன். காவல் துறையினர் சொல்லச் சொல்ல நான் புகாரை எழுதினேன் என்றால் சரியல்ல. நான் விபத்துக் காப்பீடு பெறுவதற்காக பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.09 17:19:56 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**